எளாவூருக்கும், புழலுக்குமிடையே நாள் ஒன்றுக்கு 52 தடவைகள் செல்லும் 4 பேருந்துகளையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையுடன் புழலை இணைக்கும் வகையில் நாள் ஒன்றுக்கு 32 தடவைகள் செல்லும் 2 பேருந்துகளையும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் நடத்திக்கொண்டு வருகிறது. இது, அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து எளாவூருக்கு இணைப்பை ஏற்படுத்துகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, தொழிலாளர்களுக்காக எத்தனையோ செய்துதருகிற போக்குவரத்துத் துறை அந்தப்பகுதியிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஆவடி செல்வதற்கு புழல் வழியாகவும் செங்குன்றம் வழியாகவும் நேரடியாகப் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வசதி செய்வதால் கொஞ்சநேரம் இறங்கி ஏறுவதில் எந்த விதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது.

சென்னை—ஆரம்பாக்கம் பேருந்துப்பணி

*631 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

சென்னை—ஆரம்பாக்கம் பேருந்து வழித்தடத்தினை எடூர் கிராமம் வரை நீட்டிக்கும் திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை—ஆரம்பாக்கம் பேருந்து வழித்தடத்தினை எடூர் கிராமம் வரை நீட்டிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, ஏற்கெனவே சாலை சரியாக இல்லை என்பதற்காக விடமுடியாது என்று சொன்னார்கள். இப்போது 10 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டு சாலை போடப்பட்டிருக்கிறது. ஆகவே எடூர் வரை போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆந்திரா—தமிழ் மாநிலங்களிடையே இருக்கின்ற அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ஆந்திர உயர்நீதி மன்றத்திலே ஆந்திரத்திலே இருக்கின்ற தனியார் பேருந்து உரிமையாளர்களால் வழக்கு தொடரப்பட்டு பெற்றிருக்கிறது. அந்த ஒப்பந்தம் வருகின்ற வரையில் நாம் மாற்றியமைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.